

திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி வட்டம், வாயலூர் எண்ணூர் சிறப்பு பொருளாதார மண்டலம் மிக உயர அனல்மின் திட்டப் பகுதியில் நடைபெற்று வரும் கட்டுமானப் பணிகளின் போது எதிர்பாராத விதமாக நடைபெற்ற விபத்தினால் 9 வட மாநிலதவர்கள் உயிரிழந்தார். தகவல் அறிந்த அமைச்சர்கள் ஆவடி சா.மு.நாசர், சி.வி. கணேசன் ஆகியோர் சென்னை ஸ்டான்லி மருத்துவமனையில் உயிரிழந்தோரின் உடல்களை நேரில் சென்று பார்த்து அஞ்சலி செலுத்தி காயமடைந்து சிகிச்சை பெற்று வட மாநில தொழிலாளர்களை நல விசாரித்தார். உடன் திருவள்ளூர் கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ், ஸ்டான்லி மருத்துவமனை முதல்வர் அரவிந்த உள்ளனர்.

# கரூரில் 41 பேர் உயிரிழந்த துயரச் சம்பவம்!

## அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் பேட்டி!

அரியலூர், அக். 2-

அரியலூரில் போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் அளித்த பேட்டி வருமாறு:

கரூரில் கடந்த 27ஆம் தேதி த.வெ.க. தலைவர் விஜய் மக்கள் சந்திப்பு பயணம் பிரச்சார கூட்டம் நெரிசலில் சிக்கி நூற்றுக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இதில் 41 பேர் உயிரிழந்த நிலையில் மாற்றுக் கட்சியினர் இறந்திருந்தாலும், தமிழ்நாடு முதலமைச்சர், மு.க. ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டின் முதலமைச்சர் என்ற, அந்த பொறுப்புணர்வோடு, அவரே, அவருடைய காணொளியில் சொன்னது போல, தமிழ் உறவுகள் என்ற அடிப்படையில், இரவே வந்து, அவர்களை பார்த்து, ஆறுதல் சொல்லி,இறந்தவர்களின் உடலுக்கு மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தி அவர்களுக்கான நிவாரணத்தையும் வழங்கினார். ஆனால், அந்த ரசிகர்களை யார் கூட்டினாரோ, யார் அவர்களுக்கு, தன்னை தலைவர் என்று சொல்லிக்கொண்டு, அந்த கூட்டத்தில் பேசினாரோ, அந்த இறப்புக்கெல்லாம் யார் காரணமோ, அவர் தெறித்து ஓடிவிட்டார், சென்னைக்கு.

ஆனால், இன்றைக்கு ஒரு வீடியோ வெளியிடுகிறார், அனுதாபம் தேடுகின்ற வகையில். ஆனால் தமிழ்நாடு முதலமைச்சர், துணை



முதலமைச்சர், அமைச்சர்கள் அந்த சம்பவம் நடந்தவுடன், அங்கிருந்து, திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொறுப்பாளர்கள், இன்னும் சொல்லப்போனால், அதிமுகவின் பொறுப்பாளர்கள் கூட, அங்கே வந்திருந்து, அவர்களுக்கான உதவியை செய்தார்கள். அதே போல, முதலமைச்சர் அவர்களோடு, அமைச்சர்களும், அங்கே இருந்து, அந்த களத்திலே பணியாற்றுகின்ற, காட்சியை, நானே பார்த்திருக்கிறது. ஆனால், இந்த நிமிடம் வரை, எந்த கட்சி, அந்த கூட்டத்தை நடத்தியதோ, அந்த கட்சி நிர்வாகிகள் யாரும், அந்த மருத்துவமனைக்கும் செல்ல வில்லை. யாரையும் பார்த்து, ஆறுதல் சொல்லவில்லை. யாருக்கும் உதவி செய்யவில்லை.

இப்படிப்பட்ட ஒரு, அவலமான சூழ்நிலையை ஏற்படுத்தி இருக்கிறார்கள். ஏற்படுத்திவிட்டு, அதை வைத்து, தமிழ்நாட்டு அரசியலில், ஒரு கலவரத்தை, உண்டாக்குவதற்கான, திட்டத்திலே இறங்கி இருக்கிறார்கள்.

அந்த கட்சியினுடைய ஒரு முக்கிய நிர்வாகியாக, அறிவிக்கப்பட்டிருக்கின்ற, ஆதவ் அர்ஜுனா என்ற நபர், அந்த கட்சியை நடத்துவதற்கு, அவர் தான் பணம் கொடுப்பதாக கூட, தகவல் இருக்கிறது. அவர் ஒரு, tweetஐ இரவு வெளியிடுகிறார். அதில் லடாக்கில் நடந்தது போல, நேபாளத்தில் நடந்தது போல, புரட்சி வெடிக்க வேண்டும் என்று சொல்கிறார்.

நேபாளத்திலும், லடாக்கிலும், அங்கே இருக்கின்ற பிரச்சனை என்ன? அதற்கான சூழல் என்ன? என்பதை, மக்கள் அரிவார்கள் தமிழ் நாட்டில், இவர்கள் கட்சி செய்த தவறுக்காக, அதை மறைப்பதற்கு, அதை காரணமாக வைத்து, ஒரு கலவரத்தை, ஏற்படுத்த வேண்டும் என்று, நினைக்கிறார் என்றால், அவர், இந்த தேசத்தினுடைய, பாதுகாப்பிற்கும், நாட்டின் பாதுகாப்பிற்கும், மாநிலத்தின் பாதுகாப்பிற்கும், குந்தகம் விளைவிக்கின்ற, நடவடிக்கையில்தான், இறங்கினார்.

எனவே, இந்த நபருடைய, இந்த செயலானது, தேசவிரோத செயல். இதை கண்டிக்க வேண்டிய ஒன்றிய அரசோ, அல்லது ஒன்றியஅரசுநிர்வாகிகளோ, அதில் கவனம் செலுத்தாமல் இருக்கிறார்கள் என்றால், அதற்கு பின்னணியில் அவர்கள் தான் இருந்து, இயக்குகிறார்களோ? என்கின்ற சந்தேகம் எழுகிறது.

எனவே, ஒரு தலைவன் என்பவன், தன்னை நம்பி வந்தவர்களுக்காக, முதலில் களத்தில் நிற்க வேண்டும். திராவிட முன்னேற்ற கழகத்திற்கு எந்த நேரத்தில் எல்லாம், சோதனையை சந்தித்ததோ, அந்த சோதனைகளின் போதெல்லாம், தொண்டர்களோடும், மக்களோடும் நின்றவர், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள். அதே போல்தான், இன்றைக்கு முதல்வராக இருக்கின்ற, தளபதி அவர்களும், சென்னை வெள்ளம் மட்டுமல்ல, தமிழ்நாட்டிலே, எங்கு வெள்ளம் ஏற்பட்டாலும், பாதிப்பு ஏற்பட்டாலும், அங்கே போய், களத்தில், முதலில் நபராக மக்களின் காவலராக நிற்பவர், அவராகத்தான் இருப்பார், இருந்தார்,

கொரோனா உச்சத்தில் இருந்தபோது, யாரும், அந்த கொரோனா நோயாளிகளை, சந்திக்க, துணியாத போது, அவர்தான், முதலில் மருத்துவமனைக்கு சென்று அவர்களை சந்தித்து, ஆறுதல் சொல்லியவர், நான் இருக்கிறேன் கவலைப்படாதீர்கள் உங்களுக்கு எதுவும் ஆகாது நான் பார்த்துக்கொள்கிறேன் என ஆறுதலும், நம்பிக்கையும் அந்த மக்களுக்கு தந்தவர் நம் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள்.

எனவே, இப்பொழுதும், அதே மனிதாபிமான அடிப்படையில், அதே, கடமை உணர்வோடு, அவர், மக்களை சந்திக்க வந்தார். அவர், இதேபோல் எப்போதும் களத்தில் இருப்பார். எனவே, அவர் பின்னால், தமிழகம் திரளும். இந்த ஏமாற்ற அரசியல் வாதிகள், நிச்சயமாக, மக்கள் முன், அம்பலப்பட்டு நிற்பார்கள். தன்னுடைய பாதுகாப்புக்கு விஜய் இப்பொழுது, அங்கே போய் நிற்கிறார். எந்த பாஜகவை எதிர்ப்பேன், எந்த பாஜகவினர், பாசிசத்தை எதிர்ப்பேன் என்று சொன்னாரோ, அவரிடத்திலே, அவர் மண்டியிட்டு நிற்கின்ற, ஒரு நிலைமைதான், இன்றைக்கு வந்திருக்கிறது.

எனவே, நாங்கள் ஏற்கனவே சொல்லி வந்தோம். பாஜகவுடைய கைக்கூலிகள்தான் விஜய் என்று இன்றைக்கு தமிழ்நாட்டு அரசியலிலே, பலரும் களம் இறக்கப்பட்டு இருக்கிறார்கள். அது வெளிதெரிய வருகின்ற காலம் வந்து விட்டது .தனிநபர் ஆனையம் விசாரணை நடைபெற்று வருகிறது கூடிய விரைவில் அறிக்கை வந்துவிடும் தவறு செய்தவர்கள் நிச்சயமாக 41 பேர் இறந்ததற்கு பதில் சொல்லியே ஆகவேண்டும், தண்டனை நிச்சம் உண்டு என செய்தியாளர்களிடம் அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர் தெரிவித்தார்.

## தலைமைக் கணக்காளராக பல ஆண்டுகள் பணிபுரிந்த

# ‘முரசொலி’ மாணிக்கம் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!



**சென்னை, அக். 2 -**

**‘முரசொலி’ நாளிதழில் தலைமைக் கணக்காளராகப் பல ஆண்டுகள் பணிபுரிந்த ‘முரசொலி’ மாணிக்கம் (வயது 93) அவர்கள் நேற்று (1.10.2025) பெசன்ட் நகரிலுள்ள அவரது இல்லத்தில் மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.**

தகவலறிந்து கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் வருமாறு:-

**மறைந்த மாணிக்கம் என்கிற அழகு மாணிக்கம் அவர்கள் முரசொலி அலுவலகத்தில் தலைமைக் கணக்காளராக 60 ஆண்டுகளுக்கும் மேல் பணி புரிந்து வந்தவர். அதற்கு முன் முரசொலி மாறன் அவர்களும், ‘முரசொலி’ செல்வம் அவர்களும் நடத்தி வந்த மேகலா பிக்சர்ஸில் பணி புரிந்தவர். பிறகு ‘முரசொலி’யை வெளியிட்ட அஞ்சுகம் பதிப்பகத்தில் இணைந்து தலைமைக் கணக்காளராகப் பணியாற்றியவர்.**

**முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களிடம் மிகவும் அணுக்கமாகவும், நெருக்கமாகவும் இருந்தவர். ‘நெருக்கடி நிலை’ காலத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்குத் துணையாக இருந்து பணிபுரிந்தவர்களில் முதன்மையானவர்களில் ஒருவராகத் திகழ்ந்தவர். இவரது சொந்த ஊர் இராமநாதபுரம் மாவட்டம் மகிபாலன்பட்டி என்ற கிராமமாகும்.**

**என்னிடமும் அன்புடனும், பற்றுடனும் பழகி வந்தவர் மாணிக்கம் அவர்கள்!**

**மிகவும் அமைதியான சுபாவம் கொண்டவரான அவர் முரசொலி நிர்வாகத்திற்கு ஆலோசனை வழங்குபவராகவும் செயலாற்றி வந்தார்.**

**மாணிக்கம் அவர்களின் மறைவுச் செய்தியறிந்து மிகவும் துயரமுற்றேன். அன்னாரை இழந்து வாடும் அவரது குடும்பத்தாருக்கும், நண்பர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.**

இவ்வாறு தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

வயது முதிர்வு காரணமாகவும், உடல் நலக் குறைவினாலும் பெசன்ட் நகரிலுள்ள இல்லத்தில் ஓய்வெடுத்து வந்த மாணிக்கம் அவர்கள் நேற்று (1.10.2025) பகல் 12 மணியளவில் மறைவெய்தினார்.

மறைந்த அன்னாருக்கு அரசு மோகன் என்கிற மகனும், மலர்விழி என்கிற மகளும் உள்ளனர். அரசு மோகன் மருத்துவராக ஓமன் நாட்டில் பணிபுரிந்து வருகிறார். மகள் மலர்விழி மும்பையில் மென்பொருள் நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறார். அவரது துணைவியார் கஸ்தூரி அவர்கள் சில ஆண்டுகளுக்கு முன் மறைவெய்தி விட்டார்.

மறைந்த மாணிக்கம் அவர்களின் இறுதி ஊர்வலம், இன்று (2.10.2025) காலை 11 மணியளவில் பெசன்ட்நகர், டைகர் தாத்தாக்கோரியிலுள்ள அவரது இல்லத்திலிருந்து புறப்பட்டு பெசன்ட் நகர் இடுகாட்டில் இறுதிச் சடங்குகள் நடைபெறுகின்றன.

## கழக இளைஞர் அணி அறக்கட்டளை சார்பில்

# அமைச்சர் சு.முத்துசாமி தலைமையில் மொடக்குறிச்சி அன்பகம் அமைக்கும் பணி!

## கழக இளைஞர் அணி துணை செயலாளர் கே.இ.பிரகாஷ் எம்.பி. அறிக்கை!

ஈரோடு, அக்.2–

கழகத் தலைவர், திராவிட மாடல் நாயகர், தமிழ்நாடு முதலமைச்சர், தளபதி அவர்களின் நல்வாழ்த்துக்களுடன், கழக இளைஞர் அணி செயலாளர், இளம் தலைவர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதல் படி ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி சட்டமன்றத் தொகுதியில் கழக இளைஞர் அணி அறக்கட்டளை சார்பில் இன்று (02.10.2025 வியாழக்கிழமை)காலை 10:30 to 11.00 மணி அளவில் ஈரோடு வெள்ள கோவில் மெயின் ரோடு, யூனியன் ஆபீஸ் அருகில் கழக இளைஞர் அணி துணை செயலாளர், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் ஆகிய எனது ஏற்பாட்டில் ஈரோடு தெற்கு மாவட்ட கழக செயலாளர், வீட்டு வசதி துறை அமைச்சர் சு.முத்துசாமி தலைமையில், கழக துணைப் பொதுச் செயலாளர், மாநிலங்களவை உறுப்பினர் அந்தியூர் ப.செல்வராஜ், கழக கொள்கைப் பரப்பு இணைச் செயலாளர், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி. சந்திரகுமார், ஈரோடு மாநகராட்சி மேயர் நாகரத்தினம் சுப்பிரமணி, கழக இளைஞர் அணி துணைச் செயலாளர்கள் ஜோயல், இன்பா ரகு, அப்துல் மாலிக், இளையராஜா, சீனிவாசன், கஜேந்திர பிரபு, ஜி.பி.ராஜா, அனந்தகுமார், மொடக்குறிச்சி கிழக்கு ஒன்றிய கழகச் செயலாளர் வ.கதிர்வேல், மொடக்குறிச்சி பேரூர் கழக செயலாளர் பி.வி.சரவணன், மாநில, மாவட்ட நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, பேரூர் பகுதி வார்டு கிளைக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர் ஜே.திருவாசகம், மாநகர அமைப்பாளர் கே.டி.சுதாகர்



இளைஞர் அணி உள்ளிட்ட கழக சார்பு அணிகளின் மாவட்ட, மாநகர, ஒன்றிய, பேரூர், பகுதி, வார்டு, கிளைக் கழக அமைப்பாளர் முன்னிலையில் மொடக்குறிச்சியில் அன்பகம் கட்டிடம் கட்டும் பணி துவக்க விழா நடைபெற உள்ளது.

இந்நிகழ்ச்சியில் மாமன்ற உறுப்பினர்கள், நிலைக்குழு தலைவர்கள், பகுதி கழக, வட்ட கழக நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், தலைவர்கள், துணை தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள், பாக முகவர்கள், பாக உறுப்பினர்கள் மற்றும் கழக உடன்பிறப்புகள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு கழக இளைஞர் அணி துணை செயலாளர், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் கும்மிடிப்பூண்டி தொகுதி பூண்டி கிழக்கு ஒன்றிய திமுக சார்பில் கிளை செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் ஆய்வு கூட்டம் ஒன்றிய கழகச் செயலாளர் டி.கே.சந்திரசேகர் ஏற்பாட்டில் நடைபெற்றது. இதில் மாவட்ட செயலாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ்ராஜ் தொகுதி பார்வையாளர் கவி கணேசன் ஆகியோர் கலந்து கொண்டு வருகின்ற 2026 சட்டமன்ற தேர்தலில் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து வழங்கினார். இதில் எல்லாபுரம் பி.ஜெ.மூர்த்தி, மு.பகலவன், வெ.அன்புவாணன், கே.வி.ஜி.உமா மகேஸ்வரி, ஜி.ஸ்டாலின், பா.செ. குணசேகரன்,வெங்கடாஜலபதி, நிர்வாகிகள் வி.கே.சக்ரவர்த்தி, சித்ரா பாபு, கே.பாபு, சுரேஷ், வெங்கடாத்திரி, குப்பன், ஸ்ரீராம், சிவய்யா, தாமோதரன், காண்டியப்பன், சந்தா குமார், உள்பட பலர் உள்ளனர்.

## பகுதி அவைத் தலைவர்கள் இ.முருகேசன் – டி.என்.சிவமணி தலைமையில்

# சைதை கிழக்கு - மேற்கு பகுதி கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆலோசனை வழங்குகிறார்!

## பகுதிச் செயலாளர்கள் இரா.துரைராஜ் – எம்.கிருஷ்ணமூர்த்தி அறிவிப்பு!

சென்னை, அக். 2 -

சென்னை தெற்கு மாவட்டம் சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதி சைதை கிழக்கு - மேற்கு பகுதி தி.மு.கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் இன்று (02.10.2025 வியாழக்கிழமை) மாலை 5.00 மணிக்கு சைதாப்பேட்டை பஜார் சாலையில் அமைந்துள்ள சென்னை தெற்கு மாவட்ட கழக அலுவலகத்தில் வைத்து நடைபெறுகிறது. இக்கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் - மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் கலந்து கொண்டு நிர்வாகிகளுக்கு ஆலோசனை வழங்கி பேசுகிறார்.

இது குறித்து சைதை கிழக்கு பகுதி செயலாளரும் மண்டல வார்டு குழு தலைவருமான இரா.துரைராஜ், சைதை மேற்கு பகுதி செயலாளரும் மண்டல குழு தலைவருமான எம். கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் மேலான அறிவிப்பின் படியும் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தல் படியும் “வெல்வோம் இருநூறு” படைப்போம் வரலாறு,, என்ற கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டு நடைபெற உள்ள 2026 சட்டமன்றத் தேர்தல் பணிகளை துரிதப்படுத்தி சைதாப்பேட்டை சட்டமன்றத் தேர்தலை சிறந்த முறையில் எதிர்கொள்ள சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதி உறுப்பினரும் சென்னை தெற்கு மாவட்ட செயலாளரும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சருமான மா.சுப்பிரமணியன் ஆலோசனை வழங்கி சிறப்பிக்கிறார்.

சென்னை தெற்கு மாவட்டம் சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதி சைதை கிழக்கு - மேற்கு பகுதியில் உள்ள தி.மு.கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் பகுதி அவைத் தலைவர்கள் இ.முருகேசன் - டி. என்.சிவமணி ஆகியோர் தலைமையில் இன்று (02.10.2025 வியாழக்கிழமை) மாலை 5.00 மணிக்கு சைதாப்பேட்டை பஜார் சாலையில் அமைந்துள்ள சென்னை தெற்கு மாவட்ட கழக அலுவலகத்தில் வைத்து நடைபெற உள்ளது. ஆலோசனைக் கூட்டத்தில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர் மா.சுப்பிரமணியன் கலந்து கொண்டு வருகிற சட்ட மன்றத் தேர்தலில் கழகத்தினர் ஆற்ற வேண்டிய தேர்தல் பணிகள் சம்பந்தமாக நிர்வாகிகளுக்கு ஆலோசனைகளை வழங்கி பேசுகிறார்.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் சைதை கிழக்கு- மேற்கு பகுதியில் உள்ள தலைமை செயற்குழு உறுப்பினர், மாவட்ட கழக நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள், மாநில அணிகளின் நிர்வாகிகள், பகுதி கழக நிர்வாகிகள், வட்டக் கழக செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள் மாவட்ட அளவிலான அணிகளின் தலைவர்கள், துணைத் தலைவர்கள், அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பகுதி அளவிலான அணிகளின் தலைவர்கள், துணைத் தலைவர்கள், அமைப்பாளர்கள் மற்றும் பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் மாலை 5.00 மணிக்கே கூட்டம் நடைபெறும் சைதை பஜார் சாலையில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்திற்கு வருகை தந்து குறித்த நேரத்தில் கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமாறு சைதை கிழக்குப் பகுதிச் செயலாளர் இரா.துரைராஜ் எம்.சி. மேற்குப் பகுதிச் செயலாளர் எம்.கிருஷ்ணமூர்த்தி எம்.சி. ஆகியோர் கேட்டுக் கொண்டுள்ளனர்.



ஈரோடு தெற்கு மாவட்டம்,கொடுமுடி வடக்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட கொளத்துபாளையம், கொளாநல்லி ஆகிய ஊராட்சிகளில் புதிதாக நியமிக்கப்படவுள்ள கிளை கழக இளைஞர் அணி நிர்வாகிகள் பட்டியலை கொடுமுடி தெற்கு ஒன்றியத்துக்கு நியமிக்கப்பட்டுள்ள பொறுப்பாளர் சென்னை தெற்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ச. சங்கர் கணேஸ் எம்.சி., மேற்பார்வையில் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் சதீஷ்குமார்,ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் லோகநாதன்,துணை அமைப்பாளர் பிரபாகரன் முன்னிலையில், கிளை கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகளுடன் ஆய்வு மேற்கொண்டு ஆலோசனைகள் வழங்கினார். நிகழ்வில் ஸ்ரீகாந்த், ஏ. செந்தில் குமார், பி.கே.சண்முகம், சந்தோஷ் ஜெய், பெ. பாலாஜி பலர் கலந்து கொண்டனர்.